OS:685/2018

Date: 05.11.2024

பெயர் : மனோகரன்

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**- வாதி தரப்பில்

2006 ம் ஆண்டு எனது மனைவியின் தகப்பனார் ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதியிருப்பதாக சொல்லியுள்ளேன் அந்த தானசெட்டில்மெண்டில் என்னுடைய 1 ஏக்கர் நிலமும், உங்களுடைய 1 ஏக்கர் நிலமும் சேர்த்து 2 ஏக்கர் நிலத்தினை தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளேன் என குறிப்பிட்டு ஆவண வாசகங்கள் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பாகவே இவ்வழக்கு வாதிக்கும், வசந்திக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். வாதிக்கும், வசந்திக்கும் திருமணத்தின்போது எவ்வளவு சீர்வரிசைகள் செய்தார்கள் என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் என் மனைவியின் மூலம் தெரியும். 2007 க் பிறகு பட்டாவானது எனது மாமனார் கந்தசாமி பெயரிலும், பத்திரம் எனது மாமனாரின் தாயார் பெருமாயி பெயரிலும் இருந்தது என்று சொன்னால் சரிதான். பெருமாயி அப்போது இறந்துவிட்டார். 2011 ம் ஆண்டு பாகப்பிரிவினை யார் யார் செய்து கொண்டார்கள் என்றால் 1 முதல் 3 பிரதிவாதிகளான செல்லம்மாள், முத்துமாணிக்கம், சம்பூர்ணம் மூவரும் செய்துகொண்டார்கள். வாதி மேற்படி பாகப்பிரிவினை செய்யும் காலத்தில் உயிருடன் இருப்பது இறந்துபோன கந்தசாமிக்கும் தெரியும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தெரியும் என்று சொன்னால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்துகொள்ளும்போது வாதியும் ஒரு வாரிசாக உள்ளார் என தெரிவித்தேனா என்றால் நானே 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் சொன்னேன்.

அதற்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் என்ன சொன்னார்கள் என்றால் 2 ம் பிரதிவாதி என்னிடம் வாதிக்கு திருமணத்தின்போதே போதிய சீர்வரிசைகள் செய்துவிட்டதாகவும், அவர்களுக்கே 10 ஏக்கர் நிலம் இருப்பதாகவும் தெரிவித்துவிட்டார் என்றும், ஆகவே சொத்தில் பாகம் வேண்டாம் என்று தெரிவித்ததாக கூறினார். இந்த வாசகத்தை பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோன்று மற்றொரு கந்தசாமியின் வாரிசான வசந்தி உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்று 2011 ம் ஆண்டில் தெரியுமா தெரியாதா என்றால் மேற்படி வசந்தி 1993 ம் ஆண்டே

இறந்துவிட்டதாக எனது மனைவி சொல்லி எனக்கு தெரியும், அவரது வாரிசுகளை எனக்கு தெரியாது. மேற்படி வசந்தி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகள் எங்கு இருக்கிறார்கள் என தெரியவில்லை என்பதால் நாங்கள் மட்டுமே வாரிசுகள் என வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது ஆலோசனையின்பேரில் தான் சொத்துக்களை 3 ஆக பிரித்து அதில் 1, 3 பிரதிவாதிகளுக்கு மட்டும் தலா ரூ.5000/- தொகை கொடுக்கப்பட்டுவிட்டதாகவும், 2 ம் பிரதிவாதிக்கு மட்டும் சொத்துக்களை முழுமையாக பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எனது ஆலோசனை அதில் இல்லை. 2011 ம் ஆண்டு பாகப்பிரிவினைக்கு பின்பு எந்த ஆண்டு வாதி இந்த பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார் என்றால் 2013 ம் ஆண்டே தாக்கல் செய்துவிட்டார். இவ்வழக்கினை பொறுத்து வாதி காலதாமதமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை 2011 ம் ஆண்டு நடந்த பின்னிட்டு வாதி சார்பதிவாளர் அலுவலகம் சென்று ஒவ்வொரு ஆவணங்களையும் நகல் எடுத்து பார்த்தார் என்று சொன்னால் சரிதான். 1 ம் பிரதிவாதி தொகுப்பு வீடு கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் எந்த ஆண்டு மேற்படி தொகுப்பு வீட்டினை அவர் கட்டினார் என்றால் 2010-2011 ம் ஆண்டில் கட்டினார். எந்த சர்வே எண்ணில் யாருடைய நிலத்தில் 1 ம் பிரதிவாதி தொகுப்பு வீடு கட்டினார் என்றால் சர்வே எண்.51/2B எனது மனைவியின் பெயரில் பத்திரம் பட்டா உள்ள இடத்தில் எனது மனைவியின் அனுமதியின் பேரில் 1 ம் பிரதிவாதி அரசு உதவியுடன் கட்டினார், எனது பண உதவியுடனும் கட்டினார்.

எந்த ஆண்டு எனது மனைவி எனக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் கொடுத்துள்ளார் என்றால் 24.11.2011 ல் கொடுத்துள்ளார். 24.11.2011 ம் தேதிக்கு முன்பாகவே 1 ம் பிரதிவாதி தொகுப்பு வீடு மேற்படி இடத்தில் கட்டிவிட்டார் என்று சொன்னால் சரிதான். தொகுப்பு வீடு கட்டும்போது அந்த நிலம் யாருக்கு கொடுக்கிறார்களோ அவர்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்துதான் தொகுப்பு வீடு கட்டிகொடுப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல, அனுமதியுடனும் கட்டி தரப்படும். தொகுப்பு வீட்டிற்கு எவ்வளவு பகுதி அனுமதியின்பேரில் கொடுக்கப்பட்டது என்றால் சுமார் 600 சதுரடி, குறிப்பிட்டு இவ்வளவு பகுதி என சொல்லவில்லை, பட்டாவையும் கொடுத்து அனுமதி கொடுத்துவிட்டோம். அந்த தொகுப்பு வீட்டிற்கு இந்த நிலம் 1 ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என ஆதாரம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த தொகுப்பு வீட்டிற்கு மின்இணைப்பு தொகுப்பு

வீட்டில் யார் குடியிருக்கிறார்களோ அவர்கள் பெயரில்தான் மின்இணைப்பு வழங்கப்பட்டு மின்கட்டண ரசீதும் போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மின்இணைப்பு எண்.137-011-462 என்ற மின்இணைப்பு 1 ம் பிரதிவாதி செல்லம்மாள் பெயரில் உள்ளது என மின்கட்டண அட்டையை காட்டியபோது அது அவருடையது அல்ல என மறுத்துவிட்டார். அந்த தொகுப்பு வீட்டிற்கு கதவு எண் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த தொகுப்பு வீட்டிற்கு கதவு எண்.168 என்று சொன்னால் சரியல்ல. எனது மாமியார் பெயர் செல்லம்மாள், மாமனார் பெயர் கந்தசாமி என்றால் சரிதான். தொகுப்பு வீட்டிற்கு வீட்டு வரி செலுத்துகிறார்களா என்றால் எனக்கு தெரியாது. தொகுப்பு வீட்டிற்கு வீட்டு வரி ரசீதுகள் செல்லம்மாள் பெயரில் 2013 முதல் 2022 ம் ஆண்டுகள் வரை பணிக்கனூர் கிராம ஊராட்சியின் மூலம் கொடுக்கப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் என்னிடம் காட்டப்படுவது சரியா என்றால் சரியல்ல, மேற்படி ரசீதுகள் போலியானது. அந்த தொகுப்பு வீட்டிற்கு யார்பெயரில் மின்இணைப்பு உள்ளது என்று சொன்னால் செல்லம்மாள் பெயரில் உள்ளது. யார் பெயரில் வீட்டு வரி செலுத்தப்படுகிறது என்றால் செல்லம்மாள் பெயரில் செலுத்தப்படுகிறது. மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் அந்த ஆவணங்கள் 1 ம் பிரதிவாதியினுடையது அதனால் என்னால் தாக்கல் செய்யமுடியாது. 1 ம் பிரதிவாதி பெற்ற மின்இணைப்பு எண் என்ன என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வீட்டு வரி எவ்வளவு தொகை செலுத்துகிறார்கள் என்றால் ஞாபகம் இல்லை. எந்த ஆண்டு முதல் 1 ம் பிரதிவாதி வீட்டு வரி செலுத்திவருகிறார் என தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.51/2B ல் உள்ள நிலமானது கூட்டு குடும்ப சொத்து என்று சொன்னால் தவறு.

1 ம் பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் அவர் கையெழுத்தும் போடுவார், ரேகையும் வைப்பார். 2 ம் பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகளுக்கு கல்வி அறிவு இல்லாததை பயன்படுத்திகொண்டு சட்டம் படித்த நான் எனது மனைவியின் தந்தையின் மூலம் எனது மனைவி பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை போலியாக வாதியையும், 1, 2 பிரதிவாதிகளையும் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தயார் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆவணம் 05.12.2011 ல் தயார் செய்யப்பட்டது. 05.12.2011 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுவதற்கு முன்பாகவே எனது மனைவி பெயரில் இருந்து செட்டில்மெண்ட் ஆவணத்தின்மூலம் உள்ள சொத்துக்களை

பொறுத்து எனது பெயருக்கு நான் செட்டில்மெண்ட் ஏற்படுத்திகொண்டேன் என்றால் எனது மனைவி தான் எனக்கு எழுதிவைத்தார். அந்த செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய 10 நாட்களுக்கு பிறகுதான் பாகப்பிரிவினை ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் நானும் ஒரு சாட்சியாக இருந்து கையெழுத்து செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் எனது ஆலோசனையின்பேரில் எனது பெயரிலுள்ள செட்டில்மெண்ட் சொத்துக்களை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் 2 ம் பிரதிவாதியை சமாதானம் செய்து 1, 3 பிரதிவாதிகளுக்கு தலா ரூ.5000/- ஒதுக்கிவிட்டு 2 ம் பிரதிவாதிக்கு மட்டுமே 3 ஏக்கர் 10 செண்ட் நிலத்தை ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எனது ஆலோசனையின்பேரில் எழுதப்படவில்லை. கூட்டு குடும்ப சொத்துக்களை பொறுத்து ஒரு நபர் தனிப்பட்ட முறையில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுக்க எந்த அதிகாரமும் இல்லை என்றால் அந்த சொத்து கந்தசாமியின் தனிப்பட்ட சொத்து என்பதால் எழுதிகொடுத்தார். மேற்படி கந்தசாமிக்கு சொத்துக்கள் தனிப்பட்ட சொத்துக்கள் அல்ல, அவரது தாயாரான பெருமாயிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவர் இறந்த பின்னிட்டு தான் மேற்படி கந்தசாமியினுடைய அனைத்து வாரிசுகளுக்கும் சொத்துக்களில் பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2006 ம் ஆண்டு எனது மனைவியின் தந்தை எனது மனைவிக்கு செய்துவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றும், அதேபோன்று எனது மனைவி எனக்கு 2011 ம் ஆண்டு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணமும் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதேபோன்று கந்தசாமியின் மற்ற வாரிசுகள் உள்ள நிலையில் அவர்களை விட்டு விட்டு செய்துகொண்ட பாகப்பிரிவினை ஆவணமும் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்துக்கள் மொத்தம் 5 ஏக்கர் 10 செண்ட் நிலத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்டுள்ள எனது மனைவி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணமும், எனது பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணமும், பாகப்பிரிவினை ஆவணமும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 முதல் 14 வரை உள்ள ஆவணங்கள் அனைத்தும் வாதி வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு தான் இந்த ஆவணங்கள் பெறப்பட்டுள்ளது என்பதால் இந்த ஆவணங்களும் ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. ஆகவே தாவா

சொத்துக்கள் முழுவதுமே கூட்டு குடும்ப சொத்துக்கள் என்பதால் வாதிக்கும் வழக்குரையில் கோரியுள்ளபடி சம பாகம் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல, வாதியின் தந்தை கந்தசாமி உயிருடன் இருக்கும் வரை அந்த சொத்துக்கள் தனிப்பட்ட சொத்துக்கள். கந்தசாமியின் தாயார் பெருமாயி அம்மாளின் சொத்துக்கள் பத்திரத்தின் மூலம் இருந்தது அதற்கு பின்பு கந்தசாமிக்கு பட்டா மூலம் வந்ததா பெருமாயி அம்மாள் பத்திரத்தின் மூலம் வந்ததா என்றால் கந்தசாமிக்கு பட்டாவின் மூலம் தான் வந்தது. மேற்படி சொத்துக்கள் பெருமாயி அம்மாள் பெயரில் தான் பத்திரம் உள்ளது என்றால் சரிதான், ஆனால் பெருமாயி அம்மாள் 1980 ம் ஆண்டே இறந்துவிட்டார். தாவா சொத்துக்களுக்கு மூல ஆவணமான பெருமாயி அம்மாள் பெயரில் உள்ள பத்திரங்களை மறைத்து UDR பட்டா பெற்று மேற்படி 3 ஆவணங்களையும் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதிக்கு வழக்குரையில் கோரியுள்ளபடி சம பாக உரிமை உள்ளது ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 3 ம் பிரதிவாதியை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் சொத்துக்கள் எனது பெயரில் உள்ளதால் 3 ம் பிரதிவாதிக்கும் சேர்த்தே நான் சாட்சியம் அளித்துள்ளேன். 3 ம் பிரதிவாதியை சாட்சியாக இந்நீதிமன்றத்தில் விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான் நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றம் கருதினால் சாட்சியாக விசாரிக்கிறேன்.

**மறுவிசாரணை**:- இல்லை.

ஒப்பம்/-DW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்